இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 28.10.2015

## மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 25°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 22°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 8°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

## வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (28.10.2015 முதல் 01.11.2015)

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 முதல் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் கன மழை எதிர்பார்க்கப்படுவதால், சம்பா நடவு செய்யப்பட்ட வயல்களில் வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படவும், மிதமான காற்று வீசவும் வாய்ப்புள்ளதால், சம்பா நடவு செய்யப்பட்ட வயல்களில் தழைச்சத்தை மேலுரமாக இடுவதை தள்ளி போடவும்.
- ✓ வரும் நாட்களில் கன மழை எதிர்பார்க்கப்படுவதால், இறவையில் பயிரிடப்பட்ட கம்போடியா பருத்திக்கு வடிகால் வசதி செய்யவதன் மூலம் இலைகள் மஞ்சள் நிறமாவதை தவிர்க்கலாம்.
- ✓ வானம் மேகமூட்டத்துடன் தென்படுவதுடன், காலை நேர காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால், மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து எக்டருக்கு 500 கிராம் கார்பன்டஸீம் தெளிக்கவும்.
- ✓ காற்றின் வேகம் 10 கி.மீக்கும் குறைவாக வீசும் போதும், கன மழைக்கு வாய்ப்புள்ளதால், ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 65 முதல் 88 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் தாளடி பருவ நடவு வயலை தயார் செய்யவும்.
- ✓ தாளடி பருவத்திற்கு ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49 வெள்ளை பொன்னி, திருச்சி 3, மற்றும் டிகேஎம் 13 இரகங்கள் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.
- ✓ சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 30 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ சம்பா பயிர் நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் களை முளைப்பதற்கு முன் களைக்கொல்லிகளான பூட்டாகுளோர் 50 இ.சி 1.0 லிட்டரை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். களைக்கொல்லி இடும் போது வயலில் 2 செ.மீ அளவிற்கு நீர் இருக்கவேண்டும். களைக்கொல்லி இட்டபின் 2 நாட்களுக்கு வயலுக்கு நீர் பாய்ச்சவோ வடிக்கவோ கூடாது.
- ✓ தாளடி நாற்றங்காலில் ஒரு சென்டுக்கு டீ.ஏ.பி 1 கிலோ வீதம் மேலுரமாக இடவேண்டும்.
- ✓ சம்பா நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 20 இ.சி. 500 மி.லி, அல்லது புரபனோபாஸ் 50 இ.சி. 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

**3. தெற்கு மண்டலம் - 1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $23^0$செ முதல் $25^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 63 முதல் 92 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 16 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவாரியில் கம்பு மற்றும் சூரியகாந்தி ஆகிய பயிர்களை விதைப்பு செய்யவும்.
- ✓ தற்பொழுது எதிர்பார்க்கப்படும் மழையால் வயலில் நீர்தேங்கி மிளகாயில் நாற்றழுகல் நோய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த கார்பன்டசிம் 0.1 சத கரைசலை வேரில் ஊற்றவும். வயலில் போதிய வடிகால் வசதி செய்யவும்.
- ✓ தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் மிளகாயில் இலைப்பேனின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு டைமெத்தோயேட் 2 மி.லி அல்லது மீத்தைல் டெமட்டான் 2 மி.லி என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் காணப்படும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு கார்பன்டசிம் 1 கிராம் அல்லது மாங்கோசெப் 2 கிராம் என்ற அளவில்

கலந்து தெளிக்கவும். அந்தந்த பகுதியில் நிலவும் வானிலையை கருத்தில்கொண்டு மழையில்லாத சமயங்களில் மருந்து தெளிக்கவும்.

**4. தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 20°செ முதல் 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 90 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு மெட்டலாக்சைல்+ மேன்கோசெப் @ 100 கிராம் ஆகியவற்றை விதைத்த 20 ம் நாள் தெளிக்கவும்.
- ✓ கரும்பில் இரும்பு சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெரஸ் சல்பேட் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ பருத்தியில் இலைபேன் சாறு உண்ணும் பூச்சியை கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு இமிடாகுளோபிரிட் 200 எஸ்எல் 100 மில்லி கலந்து தெளிக்கவும்.
- ✓ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனோபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கூடும்.
- ✓ நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால் விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை மேங்கோசெப் 2 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ நெல் நாற்றாங்காலை நன்கு கவனித்து நெற்பயிரில் குலை நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் தென்பட்டால் கார்பன்டசிம் அல்லது பவிஸ்டின் @ 2 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 68 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 7 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ தோட்டக்கலை பயிர்களின் நடவின் போது, ஒரு ஹெக்டேருக்கு 12 டன் நன்கு மட்கிய தொழு உரம் இடவேண்டும்.
- ✓ காபி செடியில் செதில் பூச்சியை கட்டுப்படுத்த, வேப்பஎண்ணெய் அல்லது குயினால்பாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

**6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வடகிழக்கு பருவமழைக் காலம் துவங்குவதற்கு ஏதுவான வானிலை இருப்பதால் வெப்ப அளவுகள் குறைந்து காணப்படும், எனவே கோழிகளில் தீவன எடுப்பு இயல்பாக காணப்படும். முட்டை உற்பத்தியை தக்க வைத்துக்கொள்ள முக்கியமான மூலப்பொருட்களை குறிப்பாக மக்காச்சோளம் மற்றும் சோயப்பிண்ணாக்கு போன்றவற்றை தேவையான அளவு இருப்பில் வைத்துக்கொள்ளவேண்டுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- ✓ ஐப்பசி, கார்த்திகைப் பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் டி,எம்,வி,13. கோ-7 ஆகிய இரகங்களை (105 நாட்கள்) தேர்ந்தெடுத்து விதைப்பு செய்யலாம், ஒரு ஏக்கருக்கு 55 கிலோ விதை தேவைப்படுகிறது, ஒரு கிலோ விதைக்கு 4கிராம் *டிரைக்கோடெர்மா விரிடி* கலந்து விதைப்பு செய்வதால் நோய்களிலிருந்து பயிரை பாதுகாக்கலாம்.

**7. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 7 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் ஆட்டுக்குட்டிகளை மழையில் நனையாமல் பாதுகாக்கவும்.
- ✓ கால்நடைகளுக்கு தேவையான உலர் மற்றும் அடர் தீவனங்களை மழையின் ஈரப்பதம் தாக்காமல் பாதுகாக்கவும்.
- ✓ கால்நடை கொட்டில்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி மழை நீர் தேங்காமல் பாதுகாக்கவும்.
- ✓ மானாவாரியல் அதிகப்படியான மழைநீரை வடித்து சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உழவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- ✓ மிளகாயில் காய்த்துளைப்பான்களை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கவும்.

**8.அதிக மழை பெறும் மண்டலம்**

*வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை **30$^0$**செ முதல் **31$^0$**செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **23$^0$**செ முதல் **24$^0$**செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **92** முதல் **94** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு **3** கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *வாழை தார்களை அறுவடை செய்யும் பொழுது மழை இருப்பதால் பாலித்தீன் கவர் (**2**%) பயன்படுத்தி வாழைத் தார்களை பொதிவதன் மூலம் வாழைத் தார்களின் தரத்தை அதிகரிக்கலாம்.*
- ✓ *அன்னாசியில் பூ பூக்கும் பருவத்தில் உள்ள கொண்டைப் பகுதியில் **20** பிபிஎம் எத்ரல் @ **50** மி.லி/செடி வீதம் ஊற்றுவதால் சீராக ஒரே நேரத்தில் பூக்கச் செய்யலாம்.*
- ✓ *தென்னங்குலையில் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்தான அசாடிராக்டின் **0.004** % (4 மி.லி-ஐ **1** லிட்டர் தண்ணீரில் ) கலந்து தெளிக்கவும். இதனால் குரும்பையில் ஏற்படும் சிலந்தி பூச்சி தாக்குதலை தவிர்க்கலாம்.*
- ✓ *இஞ்சியில் கிழங்கு அழுகல் நோய்த் தாக்குதல் தென்பட்டால் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றி விட வேண்டும். நோய் பரவாமல் தடுக்க ஒரு சத போர்டோ கலவையைப் பாத்திகளில் ஊற்ற வேண்டும்.*
- ✓ *கோ கோவில் தேவைக்கேற்ப பாத்திகளில் களை எடுத்தல் மண் அணைத்தல் மற்றும் மூடாக்கு இடுதல் ஆகிய பயணிகளை மேற்கொள்ளவும்.*
- ✓ *மிளகு வளரும் கொடிகளை தாங்கு மரங்களுடன் சேர்த்து கட்டி ஏற்றி விடவும்.*
- ✓ *மழை இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை குறைந்தபட்ச ஈரப்பதம் **12**% உலர்த்தியபின் உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.*


**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**

**கோவை - 3**